பக்கங்கள்:-23

# காலை முரசு

## தேர்தல்களை ஒத்திவைக்கும் திட்டம் இல்லை

**ஐ.தே.க. தெரிவிப்பு**

பிரதான தேர்தல்களை ஒத்திவைப் பதற்காகச் சர்வஜன 06

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 30 | புதன்கிழமை | 12.06.2024 | அதிர்வு 316

# நானே களமிறங்குவேன்!

## மொட்டுக் கட்சிக்கு ரணில் தகவல்

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்கவுள் ளமையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரியப்படுத்தியுள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய பொது வேட்பாளராகவே போட்டியிட எதிர் பார்க்கிறார் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என அறியமுடிகின்றது.

மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்களுடன் நடைபெற்ற உள்ளக சந்திப்புகளின்போதே ஜனாதிபதி இதனைத் தெரியப்படுத்தியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்குத் தெளிவு படுத்திய பின்னரே, தமது நிலைப்பாட்டை அறிவிக்க மொட்டுக் கட்சி திட்டமிட்டுள்ளது.



# 13 இல் பொலிஸ் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படாதாம்

## எதிர்ப்புக்களையடுத்து சஜித் அணி குத்துக்கரணம்



**“அரசமைப்பின் 13ஆவது திருத் தத்தை நடைமுறைப்படுத்தும்போது சமூக மற்றும் சுற்றாடல் பொலிஸ் அதி காரங்களை வழங்குவதில் எவ்வித சிக் கலும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அதனையே குறிப் பிட்டிருந்தார். மாறாக பொலிஸ் அதிகா ரங்கள் முழுமையாக வழங்கப்பட வேண் டும் என அவர் கூறவில்லை.”**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். எம்.மரிக்கார் தெரிவித்தார்.** 07

# ரணிலுடன் அநுரவுக்கு டீலா?

## மறுக்கின்றது தேசிய மக்கள் சக்தி



ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவுக்கும், தமது அணிக் கும் இடையில் எவ்வித 'டீலும்' கிடையாது என்று ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள் ளது.

ரணிலும், தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையில் அரசியல் 'டீல்' இருப்பதாக வும், அக்கட்சியினர் 06




இன்றைய விட யத்தை விவரிக்க முன் னர் ஒரு பழைய சம்ப வத்தை நினைவூட்டு வது பொருத்தமானது என நினைக்கிறேன்.

இது 2002 கடைசி யில் அல்லது 2003 முற்பகுதியில் – சுமார் 22 ஆண்டுகளுக்கு முன்னர் – நடந்தது.

அப்போது நாட்டின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அவரின் அரசு புலிகளுடன் சமரசப் பேச்சை ஆரம்பித்திருந்தது.

என் நினைவு சரி என்றால், 2002 மாவீ ரர் தின உரையில்தான் தலைவர் பிரபாக ரன் முதல் முதலில் 'உள்ளக 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# சர்வதேச நாணய நிதியத்துடன் இன்று முதல் 3 ஆவது கடன் தவணைக் கலந்துரையாடல்

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது கடன் தவணைக்கான கலந்துரையாடல் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கைக்கான மூன்றாம் தவணை கடன் தொகையை வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு குறித்து கவனம் செலுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது தவணைக்கான வெற்றிகரமான மீளாய்விற்கு அனைத்து நாடுகளினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் மூன்றாவது தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

# சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய ஜனாதிபதியினால் நிபுணர் குழு நியமனம்



அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்திப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிபுணர் குழுவை நியமித்துள்ளார்.

இந்த நிபுணர் குழுவின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி செயலாளரும், சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தருமான உதய செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவில் பணிப்பாளர் நாயகமாக நான்கு உறுப்பினர்களும், மேலதிக உறுப்பினர்களாக நான்கு உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

# விடுதிப் பணியாளர் சடலமாக மீட்பு!



பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்த விடுதியில் பணிபுரிந்து வந்த 50 வயதுடைய நபர் ஒருவரே தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அயலவர்கள் தலங்கம பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் படுகொலை

## சந்தேகத்தில் கணவன் கைது

பத்தரமுல்ல – தலாஹேன பகுதியில் ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரும் அவரது நண்பர் ஒருவரும் இணைந்து இந்தக் கொலையைச் செய்துள்ளனர் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட பெண்ணும், அவரது கணவரும் தலாஹேன பகுதியில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த நிலையில், கடந்த 06 ஆம் திகதி இருவருக்குமிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கணவன் தனது 44 வயதான நண்பருடன் இணைந்து, மனைவியை கொலை செய்துவிட்டு, தலங்கம பொலிஸில், தமது வீட்டில் கொலைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடளித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கணவரையும், அவரது நண்பரையும் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் சந்திப்பு:

# ரஷ்யப் படைகளுக்கு இலங்கையர்களை இணைத்துக்கொள்ளாதிருக்க இணக்கம்

ரஷ்யாவின் ஆயுதப் படைகளில் பணியாற்றுவதற்காக தொடர்ந்தும் இலங்கையர்கள் இணைத்துக்கொள்ளப்படுவதை இடைநிறுத்துவதற்கு அந்த நாடு இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சர்ஜி லெவ்ரோவ் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் இடம்பெறும் பிரிக்ஸ் அமைச்சர்களுக்கான மாநாட்டில் பங்குபற்றுவதற்காக ரஷ்யாவிற்கு சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ரஷ்ய வெளிவிவகார அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சுற்றுலா, உயர்கல்வி, பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இரு வெளிவிவகார அமைச்சர்களும் இதன்போது இணங்கியுள்ளனர்.

இதன்போது ரஷ்யாவின் ஆயுதப் படைகளில் பணியாற்றும் இலங்கையர்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தில் இலங்கையின் ஓய்வு பெற்ற இராணுவத்தினரை ஈடுபடுத்தும் மனிதக் கடத்தல் தொடர்பில் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலுக்காக ரஷ்யாவிற்கு செல்லவுள்ள இலங்கை பிரதிநிதிகள் குழுவில் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் சமன் வீரசிங்க ஆகியோர் அடங்குகின்றனர்.

ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தில் இலங்கையின் ஓய்வு பெற்ற இராணுவத்தினரை ஈடுபடுத்தும் மனிதக் கடத்தல் தொடர்பில், இதுவரை 486 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் 0112 441146 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக இந்த விடயம் தொடர்பான தகவல்களை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுப்பு

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

அதற்கமைய, கிராமிய வீதி மற்றும் கிராமங்களில் பாலங்கள் நிர்மாணிக்கும் பணிகளிலிருந்து தமது உறுப்பினர்கள் விலகியுள்ளனர் என சங்கத்தின் தலைவர் ஹேமசந்திர குணசிங்க தெரிவித்துள்ளார்.

ஆள்சேர்ப்பு நடைமுறைக்கு அனுமதி வழங்க முடியாதுள்ளமை மற்றும் வெற்றிடங்கள் காணப்படும் ஊழியர்களின் எண்ணிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்படாமை உள்ளிட்ட விடயங்களை முன்வைத்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நேற்று முதல் சுகவீன விடுமுறை போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளதாக அரச நில அளவையாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

நில அளவை நடவடிக்கைகளை தனியாருக்கு வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சங்கத்தின் தலைவர் துமிந்த உந்துகொட தெரிவித்துள்ளார்.

அத்துடன், நில அளவையாளர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவில்லை எனவும் நில அளவையாளர்களுக்கான போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தும் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே,பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நேற்று 40 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

# விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு எதிரான இடைக்காலத் தடையுத்தரவு நீடிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக விஜேதாஸ ராஜபக்ஷ செயற்படுவதைத் தடுத்து விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையுத்தரவு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் லசந்த அழகிய வண்ணவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

விஜேதாஸ ராஜபக்ஷ கட்சியின் உறுப்பினராக செயற்படுவ தற்கு எதிராகவும் இந்த இடைக்காலத் தடையுத்தரவில் உத்தர விடப்பட்டுள்ளது.

மனு தொடர்பான ஆட்சேபனைகளை முன்வைக்க கால அவகாசம் வழங்குமாறு, மனுவின் பிரதிவாதிகள் சார்பில் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம், இதற்கான கால அவகாசத்தை வழங்கி இடைக்காலத் தடை யுத்தரவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நீடித்து உத்தர விட்டுள்ளது.



# மின் கட்டண திருத்த யோசனை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பு

இலங்கை மின்சார சபை தனது மின் கட்டண திருத்த யோசனையை இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த யோசனை தொடர்பில் விரைவில் பொதுமக்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் மின் கட்டணத்தை குறைக்கத் தற்போது திட்டமிடப்பட்டுள்ள தாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைவாக, ஏனைய நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

# சிறிய வாகனத்தில் அதிக மாடுகளை ஏற்றிச் சென்ற இருவர் கைதாகினர்!

## புத்தூர் சந்திப் பகுதியில் சாவகச்சேரி பொலிஸ் நடவடிக்கை

(த.சுபேசன்)

அதிக மாடுகளை உரிய அனுமதிப்பத்திரம் இன்றியும், அவற்றைச் சித்திரவதைக்குள்ளாக்கும் விதத்திலும் சிறிய பட்டா வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது சிறிய வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 4 பெரிய மாடுகள் மற்றும் இரண்டு கன்றுகளையும் புத்தூர்ச்சந்திப் பகுதியில் வைத்து மீட்ட சாவகச்சேரிப் பொலிஸார் வாகனத்தையும் அதில் பயணித்த இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

நெடுங்கேணிப் பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்படவிருந்த மாடுகளே இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இந்த மாடுகளைப் பொலிஸார் மீட்காத சந்தர்ப்பத்தில் நெடுங்கேணி செல்வதற்குள் சில மாடுகள் இறந்திருக்கக்கூடும் எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.







# 22 கிலோ கேரள கஞ்சா குருநகரில் அகப்பட்டது

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் 22 கிலோகிராம் கேரள கஞ்சா நேற்றைய தினம் யாழ்ப்பாண பிராந்திய விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குருநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது 10 பொதிகளில் 22 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைப்பற்ற கஞ்சாவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார், சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# க.பொ.த. உயர்தரப் பரீட்சையை நவம்பர் மாதம் நடத்தத் திட்டம்!

இந்த வருடத்திற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், 2025 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை 2025 செப்டெம்பர் மாதம் நடத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பிள்ளைகளின் நேரத்தை வீணடிப்பதைத் தடுக்க பரீட்சை நிறைவடைந்தவுடன் உயர்தரக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்து, பல்கலைக்கழக நுழைவை விரைவுபடுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுயநிர்ணய உரிமை' என்ற சொல்லாடலையும் அதன் விளக்கத்தையும் கோடிகாட்டி இருந்தார்.

அதன் பின்னர் சுமார் ஒரு வாரம் கழித்து, ஒஸ்லோவில் அரசு – புலிகள் மூன்றாவது சுற்று பேச்சின் இடைநடுவில் தான் 'உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் வடக்கு – கிழக்குக்கு சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றைக் காண முயற்சிப்பது பற்றிய' ஒஸ்லோ இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இப்படிப் புலிகள் சமஷ்டி தீர்வு ஒன்றுக்கு இணங்குகிறார்கள் என்ற செய்தியை ஒஸ்லோவில் இருந்தபடி முற்கூட்டியே முதலில் நானே எனது பத்திரிகைகள் ஊடாக 'பிரேக்' பண்ணினேன். அது பற்றி ஏற்கனவே என் பத்திகளில் பிரஸ்தாபித்திருக்கிறேன். அதுவல்ல கூற வந்த விடயம்.

இது நடந்து சில வாரங்கள் அல்லது ஓரிரு மாதங்களில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த நண்பர் எரிக் பெர்ணான்டோ அழைத்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஒரு மதிய விருந்துடனான பேட்டிக்குத் தாம் ஒழுங்கு செய்திருக்கிறார் என்றும், என்னைத் தானே வந்து தமது வாகனத்தில் அழைத்துச் செல்வார் என்றும் கூறினார்.

காரில் போகும்போது ஒரு விடயத்தைச் சொன்னார். வடக்கு – கிழக்குத் தமிழ் மக்கள் மத்தியில் தன் கருத்துச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி விரும்புகிறார். யாழ்ப்பாணத்தில் இருந்தும் கொழும்பிலிருந்தும் வெளிவரும் இரு பத்திரிகைகளின் ஆசிரியர் நீங்கள் என்பதுடன், உங்கள் பத்திரிகைகள் அதிகம் தமிழர் தரப்பில் விரும்பிப் படிக்கப்படுகின்றன என அவர் எண்ணுகிறார். அதனால் தான் இந்தப் பேட்டியை ஒழுங்கு செய்யச் சொன்னார் என்றார் நண்பர் எரிக் பெர்ணான்டோ.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதுவரை எந்தத் தமிழ்ச் செய்தியாளருக்கும் தனித்துப் பிரத்தியேக செவ்வி தரவில்லை. அது உங்களுக்கு மட்டும் தான் என்றும் அவர் கூறினார். சந்திரிகாவின் பத்து வருட ஆட்சிக் காலத்தில் அந்த வாய்ப்பு தமிழ் ஊடக உலகில் எனக்கு மட்டுமே கிடைத்தது.

கனகச்சிதமாக அந்தச் செவ்வி அமைந்தது. நான் காட்டமான கேள்விகளைக் கேட்டேன். அவர் நெற்றியடி போல பதில்கள் தந்தார்.

ஒரு கட்டத்தில் அவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. "நான் கூறிய இந்தப் பதில்களை எல்லாம் நீங்கள் அப்படியே பிரசுரிப்பீர்களா? புலிகள் உங்களை அனுமதிப்பார்களா?" – என்று சந்தேகத்துடன் கேட்டார் அவர்.

"நான்தான் என் பத்திரிகைக்கு ஆசிரியர். புலிகள் அல்லர். உங்கள் பதில்களை நான் அப்படியே பதிவு செய்துள்ளேன். சொல்லுக்குச் சொல் தவறாமல் அவை பிரசுரமாகும். நீங்கள் இப்படிச் சந்தேகத்துடன் எழுப்பும் கேள்வியும், அதற்கு என் பதிலும் கூட தவறாமல் இடம்பெறும்." – என்றேன் உறுதியாக.

மூன்று நாள்கள் தொடராக அந்தச் செவ்வி எனது பத்திரிகைகள் இரண்டிலும் வெளிவந்தததாக நினைவு. முதல் நாள் செவ்வியின் மொழிபெயர்ப்பைப் படித்த சந்திரிகா அம்மையார், தமது நன்றிக் குறிப்புடன் செவ்வியில் தான் தவறவிட்ட ஒரு கருத்தைச் சேர்த்துக் கொள்ளும்படி தன் கைப்பட எழுதி பக்ஸில் அனுப்பி இருந்தார்.

இந்தப் பேட்டியில் ஒரு விடயம் வந்தது.

"சுயநிர்ணய உரிமை என்ற ஒரு விடயம் உள்ளது. ஆனால் 'உள்ளக சுயநிர்ணய உரிமை', 'வெளிப்புற சுயநிர்ணய உரிமை' என்று எதுவும் கிடையாது. அப்படி வெறும் கதை விடுகிறார் அன்ரன் பாலசிங்கம்" என்ற சாரப்பட சந்திரிகா அம்மையார் அதில் கூறி இருந்தார்.

லண்டனில் இருந்த புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தை சந்திரிகாவின் இந்தக் கருத்து உசுப்பி விட்டது. எனக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து அன்புரிமையுடன் திட்டினார்.

"தம்பி அம்மாவுடன் (சந்திரிகாவுடன்) ஒரு அப்பாயின்மெண்ட் வை. நான் அவருக்கு வகுப்பெடுக்கிறேன். அவர் படித்த பிரான்ஸ் பல்கலைக்கழகத்திலேயே இந்த விடயம் பற்றிய பல புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன. தேவையானால் அவருக்கு ஒரு நூறு, இருநூறு ஆய்வு விடயத் தலைப்புகளைத் தருகிறேன். தேடிப் படித்துப் பார்க்கச் சொல்லு!" – என்று சத்தமிட்டார்.

நான் எரிக் பெர்ணான்டோவின் மூலம் சந்திரிகாவுக்கு தகவல் அனுப்பினேன். அவரை ஒரு வகையில் உஷார் படுத்தினேன் என்றுதான் கூற வேண்டும்.

பாவம் சந்திரிகா அம்மையார். அப்போதுதான் எங்களைப் போல அவரும் 'உள்ளக சுயநிர்ணய உரிமை' என்று சொல்லாடலை முதல் தடவையாகக் கேட்டிருப்பார் போலும். ஆனால் என் எச்சரிக்கைத் தகவல் போனபின் இப்படி உள்ளக சுயநிர்ணய உரிமையைக் கிண்டலடித்து பேசும் போக்கை அவர் நிறுத்திவிட்டார்.

இனி இன்றைய விடயத்துக்கு வருகிறேன். அவர் ஒரு மூத்த தமிழ் ஊடகவியலாளர். தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும் மொழிபெயர்க்கும் வல்லமை மிக்கவர். நாங்கள் அன்புரிமையுடன் கேட்டால் அவர் செய்து தருவார். எனக்கு நண்பரும் கூட.

அவருக்கு ஒரு சிக்கல். நம் தமிழ் தலைவர் ஒருவரின் தமிழ் வாய்ச் சவடால் பேச்சை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்க யாரோ கேட்டு விட்டார்கள். ஏதேனும் தூதரகமோ தெரியவில்லை.

அந்தத் தமிழ் தலைவர் தாங்கள் வேண்டுவது 'அடிபணியாத சமஷ்டி' என்று எங்கோ பேசி இருக்கின்றார். வாய்க்கு வந்த பேச்சு. அதை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்வது நமது நண்பரின் வேலையாயிற்று. என்ன ஆங்கிலச்சொல்லில் அதைக் குறிப்பிடுவது என்று அவருக்குத் தெரியவில்லை.

வேறு வழியின்றி சமஷ்டி விவகாரத்திலும், ஆங்கிலத்திலும் புலமையுள்ள மற்றொரு தமிழ் அரசியல்வாதியை தொடர்பு கொண்டு கேட்டிருக்கிறார்.

"அடிபணியாத சமஷ்டியா? அப்படி ஒரு சமஷ்டி முறையை நான் கேள்விப்பட்டதே இல்லையே. அப்படி ஒரு சமஷ்டி இல்லை" – என்றார் விடயம் தெரிந்த அந்தத் தமிழ் பிரமுகர்.

'அடிபணியா சமஷ்டி' என்ற சொல்லாடலைப் பயன்படுத்திய தமிழ் தலைவர் இப்படி வாய்க்கு வந்ததை அந்தந்த நேரத்துக்கு அவிழ்த்து விடுபவர். அதையெல்லாம் அர்த்தத்துடன் மொழிபெயர்ப்பது சாத்தியமற்றது என்பது நம் நண்பருக்கு தெரியும். தமது மொழிபெயர்ப்பை அவர் எப்படிச் சமாளித்தார் என்று எனக்குத் தெரியவில்லை.

'அடிபணியா சமஷ்டி' பற்றி இனித் தான் சம்பந்தப்பட்ட துறையினர் ஆய்வு செய்ய வேண்டும்.

இது என்ன 'உள்ளக சுயநிர்ணய உரிமை' போன்ற அர்த்தமுள்ள சொல்லாடலா அதற்குப் பொருள் தேடவும் சரியான முறையில் மொழி பெயர்க்கவும்...?

\+ + +

மாகாணசபைகளுக்குபொலிஸ்அதிகாரம் வழங்குவது என்ற சஜித்தின் அறிவிப்பு எதிர்பார்த்த களேபரங்களை தென்னிலங்கையில் ஏற்படுத்தத் தொடங்கி விட்டது.

வடக்கில் நிற்கும் சஜித் பிரேமதாஸவுக்கு நேற்று ஒரு முன்னெச்சரிக்கைத் தகவல் வந்தது.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறையாக்கம் செய்வதற்கு இணங்கியதன் மூலம் நாட்டைத் துண்டாட வழி செய்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்று தெரிவித்து அவருக்கு எதிராக அவரது எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு முன்னால் ஓர் ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடுகள் நடக்கின்றனவாம்.

சஜித்துக்கு அனுப்பப்பட்ட எச்சரிக்கை அறிவிப்பின்படி அதை முன்னின்று ஏற்பாடு செய்பவர் யார் தெரியுமா?

அருண் சித்தார்த். ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளராக அக்கட்சியின் முக்கிய பிரமுகர் ரவி கருணநாயக்காவினால் அறிவிக்கப்பட்டவர்.

அப்படியானால் இந்த உத்தேச ஆர்ப்பாட்டத்தின் பின்னணி எங்கு இருக்கின்றது என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

கிழட்டு நரி ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக பௌத்த – சிங்கள பேரினவாதத்தை கிளறி விடவும் தயங்காது என்றே தோன்றுகின்றது...!

## தேர்தல்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வாக்கெடுப்பை நடத்தும் எவ்வித திட்டமும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது என்று அதன் தேசிய செயலாளரான முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் எனவும், சுயாதீன பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனைத்து கட்சிகளினதும் ஆதரவு உள்ளது. நாட்டை மீட்கக்கூடிய அனுபவமும் அவருக்குத்தான் உள்ளது. ரணிலின் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை நாட்டு மக்களும் உணர்ந்துள்ளனர்.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு எவ்வித திட்டமும் இல்லை. அது தொடர்பில் தனிப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே அனைத்து கட்சிகளினதும் நிலைப்பாடாகும்." – என்றார்.

## ரணிலுடன் அநுரவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிவப்பு யானைகள் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அக்குற்றச்சாட்டை தேசிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

"தேசிய மக்கள் சக்திக்கு மக்களுடன் மட்டுமே டீல் உள்ளது. ஜனாதிபதியுடன் யாருக்கு டீல் உள்ளது என்பது விரைவில் தெரியவரும்." – என்றும் தேசிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# 19 இற்கமைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஐந்து வருடங்களுக்கு மேல் அதிகரிக்க முடியாது

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு



“அரசமைப்பின் 19ஆம் திருத்தத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஐந்து வருடங்களுக்கு மேல் அதிகரித்துக்கொள்ள முடியாது. அதன் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் உரியக் காலத்தில் நடத்தப்பட வேண்டும்.”

– இவ்வாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பவ்ரல் அமைப்பு கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அரசமைப்பின் பிரகாரம் மக்கள் மக்கள் ஆணை இன்றி, நாட்டின் ஜனாதிபதிக்கு 5 வருடங்களுக்கு அப்பால் சென்று ஜனாதிபதி பதவியை வகிக்கச் சட்ட ரீதியிலான அனுமதி இல்லை.

அரசமைப்பின் 83 ஆவது உறுப்புரிமைக்கு அமைய, ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 6 வருடங்களுக்கு அதிக காலத்துக்கு அதிகரித்துக்கொள்வதென்றால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்களிப்புக்குச் செல்லவேண்டும்.

ஆனால் அரசமைப்பின் 19 ஆம் திருத்தத்தின்போது எதிர்பார்க்கப்பட்ட ஒரு விடயம்தான், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தவணைக்கு மட்டுப்படுத்துவது மற்றும் ஒரு தவணைக்கு இருந்த 6 வருட காலத்தை 5 வருடமாகக் குறைப்பதாகும்.

அதன் பிரகாரம் 19ஆம் திருத்தத்துக்குப் பின்னர் நாட்டில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி 5 வருடங்களில் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுக்கு வந்திருக்கிறது. அதனால் எந்த வகையிலும் 5வருடங்களுக்கு அதிக காலத்துக்கு ஜனாதிபதிப் பதவியை கொண்டு செல்ல முடியாது.

அத்துடன் அரசமைப்பின் 40 ஆவது உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ள சந்தர்ப்பத்தில், அதற்காக பதில் ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டால், அவ்வாறு நியமிக்கப்படும் ஜனாதிபதிக்கு, ஜனாதிபதியாக பதவி வகித்த நபரின் பதவிக் காலம் முடிவடையும் வரைக்குமே பதில் ஜனாதிபதிப் பதவியை வகிக்க முடியும்.

அதன் பிரகாரம் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த எஞ்சிய காலப்பகுதி வரைக்குமே ஜனாதிபதி பதவி வகிக்க முடியும் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி ஒருவருக்கு 5 வருடங்களுக்காக வழங்கப்பட்ட மக்கள் ஆணையை 6 வருடங்களுக்கு கொண்டு செல்ல எந்த வழியும் இல்லை. அரசமைப்பை எந்த அரத்தத்தில் ஆராய்ந்து பார்த்தாலும் – அதேபோன்று நீதிமன்ற தீர்ப்புக்களைப் பார்த்தாலும் – தற்போதுள்ள ஜனாதிபதிக்கு, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்து, அவருக்கு எஞ்சியுள்ள காலம் மாத்திரமே ஜனாதிபதிப் பதவியை வகிக்க முடியும். அதனால் அரசாங்கம் ஜனநாயக முறையில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் என நாங்கள் நம்புகிறோம். எனவே ஜனாதிபதி தேர்தலை உரிய காலத்தில் நடத்துவது கட்டாயமாகும்.”– என்றார்.

# 13இல் பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் வடக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்த கருத்துக்கு எதிராக தெற்கில் உதய கம்மன்பில உள்ளிட்ட கடும்போக்கு சிங்கள அரசியல்வாதிகள் வெளியிடும் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும்போதே மரிக்கார் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்குக்கு ஒரு சட்டமும், தெற்குக்கு ஒரு சட்டமும் இருக்க முடியாது. முழு நாட்டுக்கும் ஒரே சட்டம் என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கான நியாயத்தை வழங்க வேண்டும் என்றுதான் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருந்தார்.

13ஆவது அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்போது சமூக பொலிஸ் போன்றவற்றை மாகாண சபைகளுக்கு வழங்குவதில் சிக்கல் இல்லை.

பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் பெரும்பாலானவை மாகாண சபைகளுக்கே வழங்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி நிறுவனங்கள் அனைத்தும் கூட மாகாண சபைகளின் கீழேயே உள்ளன. அவர் கூறியதன் அர்த்தமும் இதுவே. அதனை விடுத்து பொலிஸ் அதிகாரம் முற்றாக வழங்கப்படும் என்பதல்ல.

அவ்வாறெனில் தற்போதுள்ளதுடன் சில விடயங்கள் இணையும். அந்தவகையில் சமூக பொலிஸ் மற்றும் சுற்றாடல் பொலிஸ் என்பவற்றை வழங்குவதில் சிக்கல் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்.

ஆனால், நான் இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் எதனையும் கேட்கவில்லை. வடக்கு மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். வடக்கு மாணவர்களுக்கும் தெற்கிலுள்ள மாணவர்களைப் போன்றே கல்வி கற்பதற்கு உரிமையுள்ளது.

அதேபோன்று அவர்களது அடிப்படை உரிமைகளை அபிவிருத்தி செய்வதற்கான உரிமையும் இருக்கின்றது. அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும்.

அனைவருக்கும் அரச உத்தியோகத்தை வழங்க முடியாது. ஆனால், தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியும். வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்காமல், ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்தாமல் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியாது.

எனவே, வடக்கு மக்களுக்கும் இலங்கைப் பிரஜைகள் என்ற ரீதியில் ஏனைய மக்கள் அனுபவிக்கும் சகல வசதிகளையும் அனுபவிப்பதற்கான உரிமை உள்ளது. ஆனால், அவற்றை எமது நாட்டு அரசுகள் வழங்கவில்லை.

ஐ.தே.க. அரசோ, பொதுஜன பெரமுன அரசோ அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. எனவேதான் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எதிரணியின் பொது நிலைப்பாடு

தமிழர் அரசியல் செல்நெறிப் பாதையில் நேற்றும் முன்தினமும் முக்கியமான இரண்டு நாள்கள்.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கள் தொடர்பில் இணக்கம் காணப்பட்டு, அரசமைப்புச் சட்டம் மூலம் உறுதி செய்யப்பட்ட விடயங்கள் 36 ஆண்டுகளாகியும் நடைமுறைப் படுத்தப்படாமல் இழுபடுகின்றன.

அவற்றை உள்ளடக்கிய 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று தென்னிலங்கையின் இரண்டு பிரதான எதிர்க் கட்சிகளும் - ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் - வடக்குக் கிழக்கு மக்களின் மூளை மையம் எனக் கருதப்படுகின்ற யாழ்ப்பாணத்தில் வந்து நின்று கொண்டு, தமிழர் தரப்பின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர்களிடம் நேரில் உறுதிப்படுத்திப் பகிரங்கக் கருத்து வெளியிட்ட நாள்கள் இவை.

அப்படி அந்த இரு அமைப்புக்களும் அவற்றின் தலைவர்களும் தெரிவித்த இந்தக் கருத்துக்கள் அப்படியே அவர்களின் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறும் என நம்புவோம்.

13 ஆவது திருத்தத்தை தங்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக தமிழர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை, அதேபோல தேசிய மக்கள் சக்தியினரான தாங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நேற்று யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் கூறியமை சரியானதுதான்.

ஆயினும், தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்க கூடிய ஒரு திட்டவட்டமான நிரந்தரத் தீர்வைக் காணும் வரை 13ஆம் திருத்தத்தை அரசமைப்பில் உள்ளபடி நடைமுறையாக்கம் செய்ய வேண்டும் என்று அவர் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது.

அதே கருத்தை மிகத் தெளிவான வார்த்தைகளில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், அதன் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவும் அதே தமிழரசுக் கட்சித் தலைவர்களிடம் அதே யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று முன்தினம் தெரிவித்திருக்கின்றார்.

இருவரும் - சஜித் பிரேமதாஸவும் அநுரகுமார திஸநாயக்காவும் - இது விடயத்தில் பெரும்பாலும் ஒரே நிலைப் பாட்டைத்தான் பிரதிபலித்திருக்கின்றார்கள்.

13ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம், தாமதமின்றி மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி மாகாண நிர்வாகங்களை மீண்டும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலம் முன்னெடுத்தல் என்ற அவர்களின் தெளிவான நிலைப்பாடு வரவேற்புக் குரியது.

13ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம் என்றால் மாகாணங்களுக்கு அரசமைப்பில் உறுதி செய்த பொலிஸ், காணி அதிகாரங்களை முழுமையாக வழங்குவதையும் உள்ளடக்கும் என்பது தெளிவானது.

தென்னிலங்கையின் பிரதான தலைவர்களான சஜித் மற்றும் அநுரகுமாரவின் இந்தப் பகிரங்க அறிவிப்பும் நிலைப்பாடும், தன்னுடைய எதிர்கால அரசியல் வெற்றிக்காக பௌத்த - சிங்கள பேரினவாதத்தை அரவணைத்துத் தூக்கிப் பிடித்த நிற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நல்லதோர் அரசியல் அடி. நெற்றிப் பொட்டில் விழுந்த அடி.

அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டு, உறுதி செய்யப்பட்டு இருக்கும் பொலிஸ் அதிகாரங்களை அவற்றுக்கு வழங்க முடியாது என்றும், அவற்றை வழங்குவதாயின் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும், அதிகாரத் திமிரில் பேசிய ரணிலுக்கு சஜித், அநுரகுமார இருவரும் யாழ்ப்பாணத்தில் விடுத்த அறிவிப்புகள் நல்ல படிப்பினை.

இதில் இன்னொரு விடயத்தையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

இப்போது 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம் குறித்து 'உருத்திராட்சப் பூனை' போல நமக்கு உபதேசம் செய்யும் தேசிய மக்கள் சக்திதான் முன்னர் ஜே.வி.பியாக இருந்து கொண்டு, இலங்கை உயர்நீதிமன்றம் மூலம் வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் சதி நாச வேலையை பேரினவாத வெறிப்போக்கில் முன்னெடுத்தது.

அந்த கேவல நடவடிக்கையின் மோசமான அரசியல் விளைவுகளுக்குத் தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்காதவரை, அத்தரப்பின் கருத்தை தமிழ் மக்கள் செவிமடுக்க மாட்டார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

# விக்கிரவாண்டி இடைத் தேர்தல்: தி.மு.க. வேட்பாளர் அறிவிப்பு




விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, தி.மு.கவின் விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளராக இருக்கும் அன்னியூர் சிவா விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக போட்டியிடுவார் என்று அக்கட்சியின் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அண்ணா அறிவாலயத்தில் விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார். ஆலோசனையின் முடிவில் அன்னியூர் சிவா வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏவாக இருந்த புகழேந்தி, உடல்நலக் குறைவு காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி உயிரிழந்தார். இதனை தொடர்ந்து 8 ஆம் திகதி விக்கிரவாண்டி தொகுதி வெற்றிடமானதாக அறிவிக்கப்பட்டது. பொதுவாகவே ஒரு சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ. உயிரிழுந்தாலோ அல்லது இராஜினாமா செய்தாலோ 6 மாதத்துக்குள் இடைத்தேர்தல் நடத்தப்படும்.

அந்த வகையில் விக்கிரவாண்டி தொகுதிக்கான இடைத்தேர்தல் அறிவிப்பை இந்திய தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் வெளியிட்டது.

அதன்படி, விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் ஜுலை 10 ஆம் திகதி நடைபெறும் என்றும், தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தாக்கல் ஜுன் 14 திகதியும், வேட்பு மனுதாக்கலுக்கான கடைசி நாள் ஜுன் 21 ஆம் திகதி எனவும் அறிவித்தது.

வாக்குப்பதிவு ஜுலை 10 ஆம் திகதி நடைபெறும் எனவும் வாக்கு எண்ணிக்கை ஜுலை 13 ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒடிசாவின் புதிய முதல்வராக மோகன் சரண் மாஜி தேர்வு

ஒடிசாவின் புதிய முதல்வராக மோகன் சரண் மாஜி தேர்வு செய்யப்பட்டுள்ளார். கே.வி.சிங் தியோ, பிரவாதி பரிதா ஆகியோர் துணை முதல்வர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலோடு ஒடிசா சட்டப்பேரவைக்கும் தேர்தல் நடைபெற்றது. மொத்தமுள்ள 147 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 78 தொகுதிகளை பா.ஜ.க. கைப்பற்றியது.

இதன்மூலம், தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பை பா.ஜ.க. பெற்றது. அந்தக் கட்சி முதல் முறையாக ஒடிசாவில் ஆட்சி அமைக்க உள்ளது.

இந்த நிலையில், மாநிலத்தின் புதிய முதல்வரை தேர்வு செய்வதற்கான மத்திய பார்வையாளர்களாக பா.ஜ.க-வால் அறிவிக்கப்பட்ட மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் ஆகியோர் நேற்று புவனேஸ்வருக்கு சென்றனர்.

அவர்கள் இருவரும் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மாநிலத்தின் முக்கிய தலைவர்களை தனித்தனியே சந்தித்து கருத்துகளைக் கேட்டறிந்தனர். இதையடுத்து, பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம், ராஜ்நாத் சிங் மற்றும் பூபேந்தர் யாதவ் முன்னிலையில் நடைபெற்றது. இதில், மோகன் சரண் மாஜி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஒடிசா பழங்குடியினரின் முக்கிய முகமான மோகன் சரண் மாஜி, 4 முறை ஒடிசா சட்டப்பேரவைக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஒடிசாவின் 16 ஆவது சட்டப் பேரவையில் கட்சியின் தலைமைக் கொறடாவாக செயல்பட்டுள்ளார்.

ஒடிசா துணை முதல்வராக தேர்வு செய்யப்பட்டுள்ள கே.வி.சிங் தியோ, மாநிலத்தின் மூத்த பா.ஜ.க. தலைவராக இருப்பவர். 6 முறை எம்.எல்.ஏ-வாக தேர்வு



செய்யப்பட்டவர். மற்றொரு துணை முதல்வரான பிரவாதி பரிதா, முதல்முறையாக சட்டப்பேரவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர். இவர் நிமாபாரா தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பதவியேற்பு விழா இன்று மாலை 5 மணிக்கு புவனேஸ்வரின் ஜனதா மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆந்திரப் பிரதேச முதல்வராக சந்திரபாபு நாயுடுவும் இன்று பதவியேற்க உள்ளார். அவரது பதவியேற்வு விழாவில் பங்கேற்கும் பிரதமர் நரேந்திர மோடி, பின்னர் அங்கிருந்து புவனேஸ்வருக்கு சென்று பதவியேற்பு விழாவில் பங்கேற்க இருக்கிறார்.

இந்த பதவியேற்பு விழாவில், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் பா.ஜ.கவின் உயர்மட்டத் தலைவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# விமான விபத்தில் மலாவியின் துணை ஜனாதிபதி உயிரிழப்பு

## அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு



மலாவியின் துணை ஜனாதிபதி சவ்லோஸ் சிலிமா, அவரது மனைவி உள்ளிட்ட 9 பேர் பயணம் செய்த விமானம் வீழ்ந்து நொருங்கியுள்ளது.

இதன்போது, துணை ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் உயிரிழந்துள்ளனர் என மலாவி அரசாங்கம் அறிவித்துள்ளது.

சிக்கங்காவா மலைத்தொடரில் பயணித்துக்கொண்டிருந்த போது விமானம் விபத்திற்குள்ளானது.

இதனையடுத்து, மலாவி ஜனாதிபதி லாசரஸ் சக்வேரா, நேற்று தேசிய துக்க தினமாக அறிவித்துள்ளார்.

"துரதிர்ஷ்டவசமாக, விமானத்தில் இருந்த அனைவரும் விபத்தில் உயிரிழந்துள்ளனர்" என்று ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அமைச்சரவை நேற்று அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

வடக்கு மலாவியின் விபத்து இடம்பெற்ற மலைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் முயற்சிக்கு பிறகு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.


மலாவி நாட்டின் தலைநகர் லிலோங்வேயில் இருந்து புறப்பட்ட இராணுவ விமானம் நேற்று முன்தினம் காலை விபத்திற்குள்ளானது.


விமானம் லிலாங்வேக்கு வடக்கே சுமார் 380 கிலோ மீற்றர் (240 மைல்) தொலைவில் உள்ள ஆணரணர சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க திட்டமிடப்பட்டிருந்த நிலையில், ரேடார் கண்காணிப்பில் இருந்து விலகி விபத்திற்குள்ளனதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் மலாவியின் துணை ஜனாதிபதியாக சிலிமா பதவி வகித்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு அரசாங்க திட்டங்களில் பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டார் என தெரிவித்து அவர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, கடந்த மாதம் அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







# போர் நிறுத்த தீர்மானத்திற்கு ஹமாஸ் அமைப்பு சம்மதம்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்ட போர் நிறுத்த தீர்மானத்திற்கு ஹமாஸ் அமைப்பு சம்மதம் தெரிவித்துள்ளது.

ஹமாஸின் உயரதிகாரி ஒருவர் ரொய்டர்ஸ் செய்தி சேவையிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேல் இராணுவம் காசாவின் தெற்கு பகுதி முழுவதும் வான்வழித்தாக்குதல்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், காசாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் நடத்திய தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் அதிகமானவர்கள் சிறுவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.





# இஸ்ரேல் – காசா போர் நிறுத்தம்: அமெரிக்காவுக்கு ஐ.நா ஆதரவு

இஸ்ரேல் – காசா போர்நிறுத்தத் திட்டத்தை ஆதரிக்கும் அமெரிக்காவின் முன்மொழிவுக்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவை ஆதரவாக வாக்களித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையில் உள்ள 15 உறுப்பினர்களில் 14 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். ரஷ்யா வாக்களிக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

முழுமையான போர் நிறுத்தம், ஹமாஸ் பணயக் கைதிகளை விடுவித்தல், உயிரிழந்த பணயக் கைதிகளின் உடல்களை மீளப் பெறுதல் போன்ற விடயங்களை அமெரிக்கா முன்மொழிந்துள்ளது.

இஸ்ரேலியர்கள் குறித்த திட்டத்திற்கு ஒப்புக்கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்க முன்மொழிவுக்கு ஒப்புதல் அளிக்கவில்லை எனவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.





# அநுரகுமார குழுவினர் நேற்று சித்தார்த்தனுடனும் சந்திப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக, தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்கவுக்கும் புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று சித்தார்த்தனின் கந்தரோடை இல்லத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, தேசிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவின் உறுப்பினரும் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் புளொட் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினர் கௌதமன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இச்சந்திப்பின்போது சித்தார்த்தன் சில கருத்துக்களை முன்வைத்தார்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக – அதாவது அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக – தேசிய மக்கள் சக்தி கட்சி எடுத்துள்ள நிலைப்பாடு என்ன என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை. ஆகவே அதிகாரப் பரவாக்கல் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டைத் தமிழ் மக்களுக்கு நீங்கள் வெளிப்படுத்த வேண்டும் எனவும்,

இணைந்த வடக்கு கிழக்கை நீதிமன்றத்தினூடாக தனித்தனி மாகாணங்களாக பிரிப்பதற்கு பிரதான பங்காளியாக தங்களது ஜே.வி.பி கட்சி செயற்பட்ட விடயத்தில் எம் மக்கள் மத்தியில் இன்றுவரை அதிருப்தி இருப்பதால் இவ்விடயத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுதியான நிலைப்பாட்டினை நீங்கள் வெளிப்படுத்தும் பட்சத்தில், உங்கள் கட்சி சம்பந்தமான தமிழ் மக்களது மனநிலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் சித்தார்த்தன் தெளிவுபடுத்தினார்.

அதேநேரத்தில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நியமிப்பதற்கு, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கின்ற ஐந்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளோம். சமூக மட்ட அமைப்புக்களும் அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்ஒ பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக நாங்கள் முழுமையாக அவருடனேயே செயற்படுவோம் என்பதையும் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் காணப்படும் பிந்திய நிலைமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதோடு, எதிர்காலத்திலும் தொடர்ந்து சந்திப்புக்களை மேற்கொள்வதெனவும் தெரிவிக்கப்பட்டது.







# பச்சிலைப்பள்ளியில் மக்கள் போராட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இந்திராபுரம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் குறுக்கே அமைந்துள்ள ரயில் பாதையில் பாதுகாப்பான கடவையில்லாததால் நீண்ட நாட்களாகப் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வரும் அப்பகுதி மக்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

“இதுவரையில் நிரந்தர பாதுகாப்பான ரயில் பாதை எமக்கு அமைத்துத் தரப்படவில்லை. இது தொடர்பாக பல இடங்களில் தெரிவித்திருந்தும் இதுவரையில் எந்தவொரு முடிவுகளும் எட்டப்படவில்லை. இப்பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட கிராம மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.” – என்றனர்.


இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,

”தொழில் நிமித்தமாகவும், அன்றாட தேவைகளுக்காகவும் தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. இதே ரயில் கடவையில் கடந்த சில வருடங்களுக்கு முன் 16 மாடுகள் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்த சம்பவங்களும் உண்டு.” – என்றனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து கிராம மக்களால் பிரதேச செயலரிடம் இது தொடர்பில் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

தற்போதுள்ள தற்காலிக ரயில் பாதையானது 2012 இல் கன்னிவெடி அகற்றும் பிரிவால் அமைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.











# நாட்டைப் பிரிக்கச் சஜித் முயற்சி!

## மொட்டுக் கட்சி குற்றச்சாட்டு




"அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்தமை, நாட்டைப் பிரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சியாகவே எண்ண வேண்டியுள்ளது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

வடக்கில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித், அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தனது ஆட்சியில் முற்றாக நடை முறைப்படுத்தப்படும் என்று தெரிவித்திருந்தார். இதையடுத்தே, பெரமுனவின் தேசிய ஏற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தன, சஜித் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் ரோஹித எம்.பி. ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:–

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் என சஜித் கூறுகின்றார். 13 ஐ புதிதாகக் கொண்டுவர வேண்டியதில்லை. மாகாண சபை முறைமையில் நல்ல விடயங்களும் உள்ளன. தீய விடயங்களும் உள்ளன. அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும். எனினும், சிலர் அந்த அதிகாரப் பகிர்வைத் தவறாகப் பயன்படுத்தக் கூடிய சூழலும் காணப்படுகின்றது.

13 ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது பற்றி எதிர்க்கட்சித் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும். நாட்டில் ஸ்ரீலங்கா பொலிஸ்தான் உள்ளது. மாகாணங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உள்ளனர். சஜித் ஆட்சிக்கு வந்தால் வடக்கு – கிழக்குக்குத் தனித்தனி பொலிஸ் செயற்படக்கூடும்.

இந்த நாட்டில் 30 வருடகாலப் போர் நடைபெற்றது என்பதை மறந்துவிடக்கூடாது. பாதுகாத்த நாட்டை மீண்டும் பிரிக்கவா முயற்சி எடுக்கப்படுகின்றது? ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து வாக்கு வேட்டை நடத்துவதற்காகவே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு அறிவிப்பு விடுத்துள்ளார். 13 இல் உள்ள அதிகாரங்களை எவ்வாறு வழங்குவது என்பது பற்றி நாட்டு மக்களுக்கு அவர் தெளிவுபடுத்த வேண்டும். வடக்கில் கூறும் அதே விடயத்தை தெற்கிலும் சஜித் கூறவேண்டும்." – என்றார்.

# பிந்திக் காலியான காலிக்கு புதிய அரச அதிபர் ஆனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சிக்கு இல்லை

## ரணில் அரசின் புதுமையான நிர்வாக முறைமை

(ந.லோகதயாளன்)


காலி மாவட்டத்திற்கான அரச அதிபர் நியமனத்திற்குரிய அனுமதி மற்றும் பரிந்துரைக்கான விடயம் இன்றைய அமைச்சரவை கூட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்கள் கடந்த மார்ச் மாதம் ஓய்வுபெற்றுச் சென்ற நிலையில் இரு மாவட்டங்களிலும் கடமை நிறைவேற்று அரச அதிபர்களே பணியாற்றுகின்றனர்.

வடக்கின் யாழ்ப்பாணம், கிளநொச்சி ஆகிய இரு மாவட்டங்களின் பின்னர் ஏப்பிரல் மாத இறுதிப் பகுதியில் காலி மாவட்ட அரச அதிபர் பதவி உயர்வு பெற்று அமைச்சின் செயலாளராக சென்றதனால் காலி மாவட்ட அரச அதிபர் பதவியும் வெற்றிடம் ஏற்பட்டது.

ஏப்பிரல் மாதம் வெற்றிடம் ஏற்பட்ட காலி மாவட்ட அரச அதிபர் பதவியை நிரப்புவதற்கு புதிதாக ஒருவரின் பெயர் இன்று இடம்பெறும் அமைச்சரவையில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் காலியான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கு நிரந்தர அரச அதிபரை நியமியுங்கள் என மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்த போதும் அது தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது விசனத்துடன் சுட்டிக்காட்டப்படுகின்றது.






# இளைஞனைக் குடிபோதையில் காரினால் மோதிய வைத்தியர் ரூ.5 லட்சம் சீரப்பிணையில் விடுவிப்பு

(பாறுக் ஷிஹான்)

மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்ற இளைஞனைக் குடிபோதையில் காரைச் செலுத்தி மோதி விட்டுத் தப்பி சென்ற வைத்தியரை 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க கல்முனை நீதிவான் அனுமதித்தமையுடன் பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு 1 லட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்க வேண்டும் என கட்டளையிட்டு எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கல்முனை நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற பேரின்பராஜா பகிர்தன் (வயது-41) வைத்தியரை சரீரப்பிணையில் விடுவிக்க அனுமதித்த நீதிவான் பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்.

வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி மறுவிசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் சிக்கிய வைத்தியரின் வாகன அனுமதி பத்திரம் காலாவதியாகி உள்ளமை, அபாய நிலையில் வாகனத்தை செலுத்தியமை, மது போதையில் சென்றமை, உள்ளிட்டவைக்காக ரூபா 80 ஆயிரத்திற்கும் மேல் அபராதம் மறு வழக்கு தவணையில் விதிக்கப்பட வாய்ப்புள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் சென்ற வான் மீது மரம் முறிந்து விழுந்ததில் 5 மாணவர்கள், சாரதி காயம்

## கண்டி – திகனை வீதியில் சம்பவம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கண்டி – திகண வீதியில் கெங்கல்ல எனுமிடத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் மீது மரமொன்று முறிந்து விழுந்ததில் காயமடைந்த ஐந்து மாணவர்களும், வான் சாரதியும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை பாடசாரையில் இடம்பெற்றுள்ளது.

மரம் முறிந்து விழுவதை அவதானித்த வான் சாரதி அனர்த்தத்தைத் தவிர்ப்பதற்காக முயன்ற வேளையில் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அருலுள்ள மதிலிலும் தொலைபேசி கம்பத்திலும் வான் மோதியுள்ளது. இதனால் மேலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெல்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து சம்பந்தமாக தெல்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொது வேட்பாளரை நிறுத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் சுயேச்சையாகக் களமிறங்குவேன் என்கின்றார் சிவாஜி

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இம்முறை மக்கள் மத்தியிலும் பொது வேட்பாளர் விடயம் பேசப்படுகிறது.




எனவே இம்முறை ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவர் முன்னிறுத்தப்படுவார். அதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால், நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என தெரிவித்தார்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் சிவில் சமூகத்திற்கு மக்கள் ஆணையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அது தவறானது. மக்கள் தங்கள் பிரதிநிதியாகவே நாடளுமன்ற உறுப்பினர்களை தெரிவித்து செய்துள்ளனர். ஆனாலும் மக்கள் தமக்கானதை தாமே தெரிவு செய்வார்கள். அவ்வாறு மக்களால் உருவானதே சிவில் சமூகம். அவர்களுக்கும் தமக்கு என்ன தேவை என்பதனை தீர்மானிக்க, சொல்ல முடியும் என மேலும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்



# ஒலுவில் துறைமுகம் கடற்றொழில் துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படும் என்கின்றார் டக்ளஸ்!

## அஷ்ரப்பின் கனவையும் நனவாக்குவேன் என அவர் உறுதி

ஒலுவில் துறைமுகம் கடற்றொழில் துறைக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்யப்படுமென தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்துறைமுகம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் அமரர் அஷ்ரப் கண்ட கனவையும நனவாக்குவோம் எனத் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இங்கு தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு:-

ஒலுவில் முறைமுக அபிவிருத்தி தொடர்பாக இலங்கைத் துறைமுக அதிகாரசபையும் சில முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. எனது வேண்டுகோளின் பேரில் அந்த நகர்வுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் நான் ஒழுவில் துறைமுகத்துக்கு அண்மையில் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டேன். அப்பொழுது மக்கள் இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் தமது கருத்துக்கள் உள்வாங்கப்பட வில்லையென் என்னிடம் தெரிவித்தனர். அதிலுள்ள யதார்த்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடியுமாகவுள்ளது. இத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் நான் விரைந்து முடிவெடுக்க் வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது. இந்த துறைமுகத்தை வர்த்தக துறைமுகமாக அபிவிருத்தி செய்வதை விடவும் கடற்றொழில் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதே பொருத்தமானது என்பதே எனது அபிப்பிராயம். அதுவே இப் பகுதி மக்களின் விருப்பமாகும். பிரதேச மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், நாட்டுக்கும் நன்மை ஏற்படும் விதத்தில் இதனை அபிவிருத்தி செய்ய வேண்டும். அமரர் அஷ்ரப் இத் துறைமுகம் தொடர்பாக கண்ட கனவை நான் நிச்சயம் நனவாக்குவேன் – என்றார்.

இக் கூட்டத்தில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா, அமைச்சின் செயலாளர் நயனாகுமாரி சோமரத்ன, மேலதிக செயலாளர் திருமதி அனுஷா கோகுல, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம், ஜனாதிபதி காரியாலயம், துறைமுக அதிகார சபை, சிவில் அமைப்புகள் மற்றும் பொது மக்களின் பிரதிநிதிகள், கடற்படையின் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் மேலதிக செயலாளர் திருமதி அனுஷா கோகுல தலைமையில் கரையேரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், இலங்கை துறைமுக அதிகார சபை, ஒலுவில் பல்கலைக் கழகம், நாரா, கடற்படை, சிவில் மற்றும் பொது மக்களை உள்ளடக்கி விசேட குழுவொன்று அமைக்கப்பட்டதுடன் அக் குழுவின் அறிக்கையை ஒரு வாரத்தில் அமைச்சரிடம் ஒப்படைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# வவுனியாவில் காணிகளைக் கையகப்படுத்துவதற்கு வந்த வனவள திணைக்களத்தினரை திருப்பி அனுப்பிய மக்கள்



(கே.வசந்தன்)

வவுனியா கதிர்வேலர் பூவரசங்குளத்தில் வனவள திணைக்களத்தினர் காணிகளை எல்லையிட்டு அளவீடு செய்வதற்காக வருகை தந்த போது அங்கு குழுமிய பொதுமக்கள் அவர்களை திருப்பி அனுப்பிய சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

1997 ஆம் ஆண்டு கதிர்வேலர் பூவரசங்குளத்திலிருந்து யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் 2011 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் மீளக்குடியேறியிருந்தனர்.

அவர்கள் வசித்த பிரதேசம் அனைத்தும் பற்றை காடுகள் நிறைந்ததாக காணப்பட்ட நிலையில் அவர்கள் அந்தப் பகுதியை துப்புரவு செய்து விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அப்பகுதியில் வனவளத் திணைக்களத்திற்குரிய காணிகள் இருக்கின்றன எனத் தெரிவித்து வனவள திணைக்களத்தினர் அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ள கிராமத்துக்கு நேற்று வருகை தந்திருந்தனர்.

பொதுமக்களுடைய வயல் நிலங்கள் மற்றும் தோட்டம் செய்கின்ற பகுதிகளையும் வனவளத்திற்கு உரியவையாக அவர்கள் அடையாளப்படுத்தி இருந்தமையினால் அவர்களை அந்தப் பகுதியில் அளவீடு செய்ய விடாது பொதுமக்கள் அவர்களோடு முரண்பட்டுக் கொண்டனர்.

தமது கிராமத்துக்குரிய கிராம சேவையாளரை அழைத்து வருமாறும், அதன் பின்னரே அளவீட்டுப் பணியை மேற்கொள்ள அனுமதிப்போம் என்றும், தாம் விவசாயம் செய்யும் பகுதியை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது எனவும் அவர்கள் இதன் போது தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் அங்கு வருகை தந்திருந்த வன வள திணைக்களத்தினர் தாம் செய்மதி ஊடாக பெறப்பட்ட அடையாளப்படுத்தப்பட்ட இடங்களை சரி பார்ப்பதற்கு வந்திருக்கின்றனர் எனவும் தமது பணியை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கூறினர்.

எனினும் கிராம மக்கள் 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வனமாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களை விடுவிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் தற்போது தமது விவசாய நிலங்களையும் சேர்த்து வனவளத்துக்குரியவையாக அடையாளப்படுத்துவதை மக்கள் ஆட்சேபித்தனர். ஜனாதிபதியின் கருத்து பொய்யா அல்லது வன வள திணைக்களத்தின் கருத்து பொய்யானதா என்பதை உறுதிப்படுத்துமாறும் அவர்கள் கேட்டனர்.

இதனை அடுத்து வனவள திணைக்களத்தினர் குறித்த பகுதியில் இருந்து சென்றனர். கிராம சேவையாளரையும் அழைத்து வருவார்கள் என அவர்கள் தெரிவித்து இருந்தனர்.

அங்கு குழுமிய பொதுமக்களும் இதனை அடுத்து கலைந்து சென்றனர்.

## ‘செழுஞ்சுடர்’ வெளியீடு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது சிஹாப்தீன் கலைக்கூடம் ஒழுங்கு செய்துள்ள எஸ்.நஸிறுதீனின் ‘செழுஞ்சுடர்’ சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை மாலை மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸ் தேசிய தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா கலந்து கொள்ளவுள்ளார்.

வைத்திய கலாநிதி எஸ்.நஜிமுதீன் தலைமையுரையையும், தென் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.அப்துல் றஸாக் நூல் அறிமுகவுரையையும், தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நயத்தலுரையையும், தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உதவி பதிவாளர் மன்சூர் ஏ காதர் விமர்சன உரையையும் நிகழ்த்தவுள்ளனர்.



# சட்ட விரோதமாக மாணிக்க கல் அகழ்வு நால்வர் ஹட்டன் பொலிஸாரால் கைது!

(மஸ்கெலியா)

சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகன்ற நால்வர் ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை வேளையில் இடம் பெற்றுள்ளது.

ஹட்டன் பொலிஸ் பிரிவில் உள்ள டிக்கோயா மாணிக்கவத்தை பிரிவில் சட்ட விரோதமாக முறையில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு கொண்டு இருக்கின்றனர் என ஹட்டன் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்பு அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அந்தத் தகவலை தொடர்ந்து அப்பகுதிக்குச் சென்ற ஹட்டன் பொலிஸார் அங்கு சட்ட விரோதமாக முறையில் மாணிக்க கற்கள் அகழ்ந்த நால்வரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யபட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர் என்று ஹட்டன் பொலிஸ் குற்ற தடுப்பு பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தனது ஐந்தாவது உலக சாதனையை இந்தியாவில் நிகழ்த்திய திருச்செல்வம்





(த.சுபேசன்)

யாழ்ப்பாணம் – தென்மராட்சியைச் சேர்ந்த 60 வயதான செ.திருச்செல்வம் ஐந்தாவது உலக சாதனையை இந்தியாவில் நிகழ்த்தியுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இவர் இந்தியாவில் தனது ஐந்தாவது உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தால் இந்தியாவின் தமிழ் நாடு, சிவகங்கை மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த உலக சாதனை நிகழ்வில் உலக சாதனையாளர் திருச்செல்வம் 1700 கிலோ எடை கொண்ட வாகனத்தை தனது தாடியின் பலத்தால் 510 மீற்றர் தூரம் இழுத்து தனது ஐந்தாவது உலக சாதனையைப் படைத்துள்ளார்.

உலக சாதனையாளர் திருச்செல்வம் இதற்கு முன்னர் தாடி, தலைமுடி மற்றும் கழுத்து ஆகியவற்றின் பலம் கொண்டு கனரக வாகனங்களை இழுத்து நான்கு முறை சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் தியகலவில் விபத்து; இருவர் காயம்!

(பொகவந்தலாவ)

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியின் தியகல பகுதியில் வான் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானமையில் வானில் பயணித்த இரண்டு பேர் பலத்த காயங்களுக்கு ஆளாகிய நிலையில் கினிகத்தேன வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்றுய் செவ்வாய் கிழமை காலை 7.30 மணியளவில் இடம் பெற்றது என்று கினிகத்தேன பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கண்டியில் இருந்து ஹட்டனை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸ/ம், ஹட்டனில் இருந்து கண்டி நோக்கி பயணித்த வானுமெ இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தையடுத்து பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பஸ்ஸுக்கும் வானுக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த விபத்துக் காரணமாகக் ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கினிகத்தேன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# கிழக்கில் 600 பொலிஸாரின் 34 வருட ஞாபகார்த்த நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சுமார் 600 பொலிஸார் படுகொலை செய்யப்பட்டு 34 ஆண்டுகள் நிறைவடைந்ததை அனுஷ்டிக்கும் நிகழ்வு நேற்று அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் அமைந்துள்ள ரணவிரு ஞாபகார்த்த நினைவு தூபியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச். எம்.என். ஜயபத்ம உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள் பொலிஸார் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் 1990 ஆம் ஆண்டு கடத்திக் கொல்லப்பட்ட பொலிஸார் உட்பட யுத்தத்தினால் உயிர்நீத்த மற்றும் கடந்த கால யுத்தம் உள்ளிட்ட இதர காரணங்களினால் மரணமடைந்த பொலிஸாரின் குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடுகள் இதன் போது முன்னெடுக்கப்பட்டன.

இது தவிர நிகழ்வின் ஆரம்பத்தில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என்ஜ.யபத்மவினால் பொலிஸ் கொடி அரைக் கம்பத்தில் ஏற்றப்பட்டதுடன் உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை உள்ளிட்ட பல பொலிஸ் நிலையங்களை முற்றுகையிட்ட புலிகள் சகல சிங்கள, முஸ்லிம் பொலிஸார்களையும் ஆயுதங்களையும் அள்ளிச் சென்றார்கள். அதன் பின்பு திருக்கோவில் பகுதியில் உள்ள ரூபஸ் குளம் காட்டுப் பகுதியில் சகல பொலிஸாரும் சுட்டுக் கொல்லப்பட்டனர் கூறப்படுகின்றது.
















# கொழும்புக்கு அடுத்து டெங்குத் தாக்கம் யாழ். மாவட்டத்தில்தான் மிக அதிகமாம்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இந்த ஆண்டு அதிகரித்த டெங்குத் தாக்கத்தில் யாழ்ப்பாணம் மாவட்டம் இரண்டாவது இடத்தில் உள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதன்பிரகாரம் தற்போது கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையுடன் கூடிய காலநிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய இம்மாதம் முதல் 11 நாள்களில் மட்டும் 971 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமையோடு, இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் நாடளாவிய ரீதியில் 25 ஆயிரத்து 891 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 9 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளன தேசிய டெங்கு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் 14 இடங்கள் டெங்கு அபாய வலயங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இதில் மிக அதிக டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். இதற்கமைய கொழும்பில் 5ஆயிரத்து 624 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கொழும்பிற்கு அடுத்தபடியாக அதிக டெங்கு நோயாளர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர். இங்கே 3,930 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கம்பஹா மாவட்டத்தில் 2,487 பேரும், கண்டி மாவட்டத்தில் 1,986 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 1,441 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 1,372 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.



# யாழில் தெருவோரத்தில் சுகாதாரமற்ற வியாபாரம்

## மூவரிற்கு 35 ஆயிரம் ரூபா தண்டம்

(ந.லோகதயாளன்)

திருநெல்வேலி பொது சுகாதாரப் பரிசோதகர் கொக்குவில் பகுதிகளில் இயங்கிய சுகாதாரமற்ற தெருவோர வியாபார நிலையங்கள் மீது மேற்கொண்ட பரிசோதனையில் 35 ஆயிரம் ரூபா குற்றப்பணம் விதிக்கப்பட்டது.

கொக்குவில் பகுதியில் வீதியோரங்களில் மருத்துவ சான்றிதழ் இன்றி உணவை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் இன்றி உணவைக் கையாண்டமை போன்ற அடிப்படையான சுகாதார வசதிகள் கூட இல்லாமல் சில தெருவோர வியாபார நிலையங்கள் இயங்கியமை பரிசோதனையில் இனங்காணப்பட்டன.

அவ்வாறு இனங்காணப்பட்ட மூன்று வியாபார உரிமையாளர்களிற்கு எதிராக யாழ் மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

10 ஆம் திகதி திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேலதிக நீதிவான் செ.லெனின்குமார் மூவருக்கும் மொத்தமாக 35ஆயிரம் ரூபா தண்டம் விதித்தம்சியோடு கடும் எச்சரிக்கையும் வழங்கினார்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.06.2024




இன்று உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். சவாலான சூழ்நிலைகள் காரணமாக இன்று சமநிலை இழக்க நேரலாம். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையுடன் கவனமாக பணியாற்ற சில விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டும்.

பணியில் காணப்படும் பதட்டம் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தகைய சூழ்நிலைகளை தவிர்த்தல் நல்லது. சகஜமான அனுகுமுறையால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கலாம்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலைகளை உண்டாக்கும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. விரும்பியது கிடைக்கும் சூழ்நிலை காணப்படவில்லை. வளைந்து கொடுத்து போவதன் மூலம் நற்பலன்களைக் காணலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்கள் பணிகளை ஒழுங்கு முறையாக திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்களின் குழப்பமான மன நிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் வேண்டும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக காணப்படவில்லை. பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும். தலை வலி அல்லது முதுகுவலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். இலக்குகளை அடைவதற்கான தன்னம்பிக்கை உங்களிடம் நிறைந்து காணப்படும். இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணியில் உங்கள் தனித் திறமையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் செயல் திறனில் இது பிரதிபலிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர்பாராத பண வரவுகள் காணப்படும்.

ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது. முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




பொறுமை மற்றும் உறுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் அனுகுமுறையில் வேகம் கூடாது. உங்கள் செயல்களை திட்டமிடுவதன் மூலம் வெற்றி காணலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அதனால் நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

உங்களின் எதிர்மறை உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எனவே இதனை தவிர்த்தல் நலம்.

பணப்புழக்கம் சீராக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இன்று உங்கள் ஆற்றல் குறைந்து காணப்படும். தலை வலிக்கான வாய்ப்பு உள்ளது. இன்று ஓய்வாக இருப்பது நல்லது.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். கூடுதல் பொறுப்புகளுக்கு நேரம் செலவழிக்க நேரும். மனதில் குழப்பங்கள் காணப்படும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். நன்மையான பலன்கள் கிடைக்க திட்டமிடுதல் நல்லது.

உங்கள் துணையுடன் கவனமாக உரையாட வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் உறவுப் பிணைப்பு வலுப்படும். உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

கண் எரிச்சல் ஏற்படலாம். கண்களை வருத்திக் கொள்ளாமல் இருப்பது நல்லது. உற்சாகமான மன நிலையை பராமரிக்க வேண்டும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. தீய விளைவுகள் ஏற்படாமல் இருக்க ஆழ்ந்து யோசித்து செயல்பட வேண்டும். பிறருடன் பேசும் போது வார்த்தைகளை கவனமாக பிரயோகிக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற முடியாதபடி ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தகவல் பரிமாற்றம் திருப்திகரமாக இருக்காது.

உங்கள் துணையுடன் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இன்றைய நாளை அமைதியாக கழிக்க இதனை தவிர்த்தல் வேண்டும். உங்கள் பிரியமானவருடன் உங்கள் அணுகுமுறையை மாற்றிப் பழகுங்கள்.

தேவையற்ற செலவினங்கள் இன்று காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தி சிக்கனமாக இருப்பது நல்லது.




இன்று உங்கள் முயற்சிகளில் நல்ல பலன்கள் கிடைக்கும். நீங்கள் வெற்றி பெறுவதற்கான உறுதியுடன் காணப்படுவீர்கள். உங்களின் நம்பிக்கை உணர்வு உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நெருக்கம் காணப்படும். உங்களின் பரஸ்பர பேச்சில் அது வெளிப்படும். இருவரும் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள்.

நிதிநிலையைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் கையில் இருக்கும் உபரி பணத்தைக் கொண்டு நீங்கள் நீண்ட கால திட்டம் ஒன்றைத் தீட்டலாம்.

மனதில் இருக்கும் திருப்தி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அனுபவித்து மகிழும் நாள். உங்கள் குழந்தைகளைப் பற்றி பெருமைப்படுவீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும்.

புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியாற்றுவதை எளிதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.உங்கள் துணையின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடு முயற்சிக்கு இன்றைய நாளை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எனவே உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.06.2024

## தனுசு

எதிர்பாராத நிச்சயமற்ற பலன்கள் காணப்படும். நன்மை மற்றும் தீமை இரண்டும் கலந்த பலன்கள் காணப்படும். சவால்களை சந்திக்க பொறுமை தேவை.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். திறமையுடன் செயலாற்ற மிகுந்த கவனம் தேவை.

உங்கள் துணையுடன் பேசும் போது களிப்பான மனநிலையில் எற்றுக் கொள்ள வேண்டும். அவரின் வார்த்தைகளை உன்னிப்பாக கேட்பதன் மூலம் உறவில் பிரச்சினைகளை தீர்க்கும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். எதிர்கால பாதுகாப்பு கருதி பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியமாய் இருக்க சத்தான உணவை உட்கொள்ளவேண்டும். இன்று அமைதியின்மையும் சோர்வும் காணப்படும்.

## மகரம்

இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்கவேண்டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனைத் தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் சாதகமாக இருக்காது. தொலை தூர நிலுவைப் பணம் கிடைப்பதற்கு தாமதங்கள் ஏற்படும்.

## கும்பம்

உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.

இன்று சுறுசுறுப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

## மீனம்

இன்றைய நாள் சுறுசுறுப்பாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். உங்கள் முயற்சியில் வெற்றிகளை எளிதாக அடையலாம். இதனால் உற்சாகமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

சக பணியாளர்கள் ஆதரவாகாவும் உதவிகரமாகவும் இருப்பார்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் விதமாக உங்கள் செயல்திறன் காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் பராமரிக்க முடியும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உபரி பணத்தை நல்ல விஷயங்களுக்கு பயன்படுத்தலாம்.

இன்று நலமாய் உணர்வீர்கள். இதனால் நல்ல ஆரோக்கியம் பராமரிக்கப்படும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.
Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94777 546 546 | +94770 774774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.


Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park


# ஆசிரியர்கள் இன்று முதல் தொழிற்சங்க நடவடிக்கை

சம்பள நெருக்கடியை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தயாராகியுள்ளன.

இதன் முதற்கட்டமாக இன்று முதல் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

இதற்கு இணையாக கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான மதிப்பீட்டுப் பணிகளிலிருந்து இன்று மாலை முதல் விலகவுள்ளன என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.



# முன்னாள் எம்.பி. சிவமோகன் பயணித்த வாகனம் விபத்தில்; ஒருவருக்குக் காயம்

## மட்டக்களப்பு தாளங்குடாவில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வீதி தளங்குடா பிரதேசத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோன் பயணித்த வாகனம் வீதியை விட்டு விலகி மின்சார தூணில் மோதிய விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமோகன் உள்ளிட்ட 3 பேர் சம்பவதினமான இன்று அதிகாலை பொத்துவில் அறுகம்பையில் இருந்து வவுனியா நோக்கி வாகனத்தில் பயணித்துள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள தாளங்குடா பகுதியில் வாகனம் வீதியை விட்டு விலகி மின்சார தூணில் மோதிய விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.